**18.10.2022**

**OS.No. 136/2020 DW : 3, திரு. செஞ்சுகாண்**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

வாசாஆ1ல் 1 ஏக்கர் 30 சென்ட் இருப்பதாகவும் வாதிகள் 96 சென்ட்க்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்திருப்பதாக நாங்கள் எதிர்வழக்குறையில் சொல்லியிருக்கிறோம். மீதியுள்ள 34 சென்ட்-ஐ ராமனுக்கு வாதிகள் விட்டு கொடுத்திருப்பதாகவும் ராமன் என்பவரையும் வழக்கில் சேர்க்கவில்லை என்று எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறோம். ராமனுக்கும் வாதிகளுக்கும் இடையே வஞ்சககூட்டு இருப்பதாக நாங்கள் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. சர்வே எண் 185/7, 185/8, 185/9, 185/10 ஆகிய சர்வே எண்களில் 1 ஏக்கர் 30 சென்ட் இருக்கிறது. மேற்கூறிய சர்வே எண்கள் என்ன வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்று கேட்டால் புஞ்சை என்ற வகைபாடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழிகாட்டு மதிப்பில் சர்வேஎண் 185/7 அரசு புறம்போக்கு இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே சர்வேஎண் 185/7க்கு நீதிமன்ற முத்திரை கட்டணம் செலுத்தவில்லை என்றும் ராமன் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. ராமன் என்பவர் தாவா சொத்தை அபகரிக்கவோ அல்லது அதை பொறுத்து ஆவணங்கள் எழுதி வைக்காததால் அவரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வீடுகட்டுவதற்கு பிளான் அப்ரூவலை பஞ்சாயத்தில் வாங்கியிருக்கிறோம். என் தந்தை எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தையும் தாய்பத்திரத்தின் ஜெராக்ஸ் காட்டி பிளான் அப்ரூவல் வாங்கினோம். போலியாக ஆவணங்களின்

அடிப்படையில் வாங்கிய பிளான் அப்ரூவல் தவறானது என்றும், நாங்கள் வீடுகட்டியது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. என் தந்தை செட்டில்மெண்ட்-ல் 20 சென்ட்-ஐ எனக்கு நிலமாக தான் எழுதி வைத்தார். அந்த இடத்தில் தான் வீடுகட்டியிக்கிறேன். என் தந்தை வீடாக எழுதி கொடுக்கவில்லை. அந்த சொத்தில் வீடு இல்லாததால் என் தந்தை வீட்டை காட்டவில்லை. ஆகவே நான் தாக்கல் செய்துள்ள மின்கட்டண ரசீதுகள் தாவா சொத்துக்குரியது இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மேற்கூறிய ஆவணங்கள் ஊரில் உள்ள வேறு பழைய வீட்டிற்கு சம்பந்தப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு வேறு வீடு இல்லை. சர்வே எண் உட்பிரிவுகளை குறிப்பிட்டு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டது. சொத்தை எழுதி கொடுத்த பின்னர் ஆவணங்களை காட்டி தான் உட்பரிவு செய்யமுடியும் என்றும் நாங்கள் முதலிலேயே உட்பிரிவை காட்டி எழுதியிருக்கிறோம் என்றால் சரியல்ல. 1 ஏக்கர் 30 சென்ட்-ஐ தலா 65 சென்டாக பிரித்தபோது 3 பேர் பெயரிலுல் பட்டா இருந்தது. அந்த பட்டாவை தாக்கல் செய்யவில்லை. வெங்கடாசலம் நாயக்கர் பெயரிலோ, சின்னசாமி பெயரிலோ உள்ள பட்டாவையோ தாக்கல் செய்யவில்லை. வாசாஆ1 எழுதப்பட்டதிலிருந்து செட்டில்மெண்ட் ஆவணம் எழுதும்வரை அந்த சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதப்படவில்லை என்றும் பட்டாவும் மாற்றப்படவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 845 என்ற பட்டா தாவா சொத்தை பொறுத்த பழைய பட்டாவா என்று கேட்டால் அது அவர்களாகவே மாற்றிக்கொண்டது.

பழைய பட்டா தான் இன்றுவரை இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டா என் பெயரில் உள்ள 1304 என்ற பட்டா தான் வா.சா.ஆ.31 ஆகும். 2011ல் என்னிடம் காட்டப்படும் 1655 என்ற பட்டா பாலன் பெயரில் ஏற்பட்டது. அது வாசாஆ32 ஆகும். 1654 என்ற பட்டா மணி என்பவர் பெயரில் ஏற்பட்டது. அது வாசாஆ33. ராதா பெயரில் ஏற்பட்ட 4 என்ற பட்டா வாசாஆ34. அந்த பட்டாக்களை வாங்க எங்கள் பெயரில் எந்த விதமான ஆவணமும் இல்லை என்றும் ஆகவே மேற்கூறிய 4 பட்டாக்களும் செல்லாது என்றால் சரியல்ல. அந்த பட்டாக்களை பற்றி 2019ல் தான் வாதிகளுக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. பிவாசாஆ24ஐ எனக்கு முந்தைய சாட்சிகள் தாக்கல் செய்யாமல் ஏன் என்மூலம் தாக்கல் செய்யப்பட்டது என்று வங்கியில் இருந்து அந்த ஆவணம் தாமதமாக வந்ததால் நான் தாக்கல் செய்தேன். பிவாசாஆ24ல் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அதுகுறித்து கேள்வி கேட்டால் எனக்கு சொல்ல தெரியாது. சிட்டாவை மட்டுமே காட்டி அடமான கடனை வாங்கினோம். அது கிராமத்தில் உள்ள வங்கி என்பதால் விதிகளை கடுமையாக கடைபிடிக்காமல் சிட்டாவை வைத்து கடன் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அடமான கடன் அதிகாமாக வேண்டும் என்பதற்காக ஒரு வீட்டையும் காட்டினோம். அந்த வீடு தாவா சொத்தில் வருகிறது என்றால் சரியல்ல. 2002ம் வருடமே பிரச்சனை ஏற்பட்டது என்றும் பிவாசாஆ24ல் கண்டுள்ள கூரைவீட்டை நாங்கள் புறம்போக்கு இடம் என்று ராதா சொன்னார் என்றால் சரியல்ல. தாவா

சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும் ஆகவே பிவாசாஆ24ல் கண்டுள்ள குடிசை வீடும் எங்களுக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும் பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.